

# அன்பின் குடிலில் நடந்த ஸத் ஸங்கம் !!!

இதழ் I

பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# அன்பின் குடலில் நடந்த ஸத் ஸங்கம்!!!

இதழ் I

# பொருளடக்கம்


1. ஜீவன்முக்தி பெறும் நிலை---------------------------------1

௨. ஸ்ரீ உத்தாலகர் வருகை-------------------------------------6

௩. வாஸிஷ்ட வாக்கியத்திற்கு விளக்கம்-----------------------1௨

௪. ஸாஸ்திரம், வேதம், வேதாந்தம் - விளக்கம்----------------௨8

5. தத்வஞானம், வாசனாக்ஷயம், மனோநாசம், ஜீவன்முக்தி--௩9

6. சொல்லற சும்மா சுகமாக இரு - விளக்கம்--------------௪9


எல்லாம் நீ!





ஸத்திய வாக்கு (1)

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!"

"ஸத்குரு திருவடி துணை!" "நம்பினோர் கெடுவதில்லை!"

"தெய்வம் மனுஷ்யாணாம்!" "யத்பாவம் தத்பவதி!"

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம், ஓம்!"

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!"

"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!"


அன்பும்! அறிவும்! பணிவும்! கனிவும்! கருணையும்!
ஓர்மையும்! நம்பிக்கையும்! வைராக்கியமும்!

# உருக்கமும் ஏக்கமும்!

கொண்ட, எம் ஆத்மானந்த குழந்தாய்!

# கேட்டாயா!!!

உன் அடக்கத்திறவே தான், "யத்பாவம் தத்பவதி"!
என்ற நியதியால் **மனம்! அறிவானை**
பேரானந்தம்
வெறுவாய் என, வாழ்த்தி ஆசி வழங்குகிறோம்!
அடங்கு! அடங்கு! அடங்கு! அடக்காதே! அடக்காதே!



எந்த **கர்மாவினாலும்!** தன்னை அறியும் அறிவாகிய, ஆத்ம ஞானம் பெற முடியாது, என்பதே ஸத்தியம்! மற்றும் எதனாலும், ஜீவன் முக்தி இல்லவே இல்லை!


**கர்மாவை!** முழுமையாக, விட்டாலன்றி, தன்னை அறியும் அறிவாகிய, ஆத்ம ஞானம் பெற முடியாது, என்பதே ஸத்தியம்!

இக் **கலியில்|ப்ரவர்த்தி** இல்லாமல், வேறு எந்த நிலையிலும், கர்மாவை தொலைக்க முடியாது, என்பதே ஸத்தியமாகும்!

இக் கலியில், **நிவர்த்தி** மார்க்கம், கடைப்பிடிக்க முடியாமல், கர்மாவை வைத்தே, இக்கலி **புருஷன்** வேலை வாங்கிவிடுவான். என்பதும் ஸத்தியமே!

கர்மா இல்லாமல், **த்யானம் இல்லை!**


த்யானம் இல்லாமல், **கர்மா!** இயங்காது என்பதுவும், இயக்க முடியாது என்பதும், ஸத்தியமே!



③

அக்கர்மா தாவமானது (இயங்கும் போது) மறை
மய யாவனியானது, அறிவான நிலையால்,
ஜீவகர்த்தத்துவத்தை முழுமையாக விட்டு,
ஈசகர்த்தத்துவத்தை முழுமையாக [illegible] பயமின்றி
ஏற்றுக் கொண்டால், ஜீவ கர்த்தத்துவம் நாசமாகும்.
ஜீவகர்த்தத்துவம் நாசமான நிலையால், இந்த கர்மா
தாவமானது, தாம் ஏற்று வந்த, பிராப்தத்தை மட்டும்
முடிக்கும். வேறு எந்த, சொந்த கர்மாவையும்,
ஆகாமிய கர்மாவை தொடாது! தொட முடியாது! தொட முடியாமல்,
அது அவன் கருணையாலும், அவன் மாயா கவனித்துக் கொள்ளும்
ஜீவகர்த்தத்துவம் நாசமாகி! ஈசகர்த்தத்துவம் மேலோங்க
வேண்டுமானால், சர்வார்ப்பணமாகிய, எல்லாம் நீயே!
எல்லாம் உன் செயலே! எல்லாம் உன் பொருளே!
உன்னையல்லால், வேறு கதி இல்லை என்ற நிலையால்,

(4)




நீட்டினோம்! நிமிர்ந்தோம்! விழுந்தோம்! என

**மனம்!** முழுமையாக, மயமாக கரைந்து, கலந்து விடுவென்றம். இதனால், இக்கவியின், முன் தோஷங்கள், அனைத்தும், சர்வ நாசம் ஆகும். **ஸத்வம்** ஒன்றே மேலோங்கி நிற்கும். அந்த நிலை பெற்ற,

**மறுவிஜடியே!** நீயே ஸ்ரீபகவான் ஆவாய். இதுவரையில் இங்கு கர்மாவின், நுகர்ச்சியும்! எழுச்சியும்! நிகழ்ச்சியும்! எப்பயிற்சியும்; எம்முயற்சியும்! இல்லாமல், கோப குணங்கள் மனதால் தாக்காமல்

**அன்பாகவே!** எந்த சந்தேக கலக்க பயமின்றி நடைபெறுவதை நாமே உணரமுடியும். பிராரப்தத்தின் படி, கர்மாகாரியங்களில், ஈடுபட்டாலும், சூர்யனிடத்தில் நாம் காண்பது போன்ற, நிலையில் அமைதியான் ஆனந்தம்? நிலவும். அங்கு விகாரமும் தோன்றுது. விகாரமும், பிரச்சனையும் தோன்றுது மறையும்.



நான்! எனைத்/ விட்ட (5)
நிலையில் விடுபட்டு
வின் ஜபமும் தொழுகையும்.
இதனால் ஜீவகர்த்தத்துவம்
நாசமானதால் கர்மாவை
ஏற்கும் மனோபாரமும்
குறைவதை அனுபவத்தில்
உணரலாம். இக்கலியில்
வேறு எந்த மார்க்கமும் கை கொடுக்காது
என்பதும் ஸத்தியமே.

இந்த நிலை, அனுபவம் பெறும் போது,
ஸ்ரீ ஸத்குரு நாதரின், **பிரம்மார்ப்பணம்**
இலகுவாக, நம் மனம் பற்ற முடியும்!

காரணம்:— சர்வார்ப்பணத்தில், நம்முடைய,


**மனோபாரம்ஸ்தூலசிரமம்**

சர்வநாசமாகி விடும்! இது ஸத்தியம்!


பிரம்மார்ப்பணத்தின் முழுமையான ரகஸ்யம்:—

**இருப்பது ஒன்றே/ நடப்பது நலமே/** என்ற, ஒன்றினுள் எல்லாம் மயமாகி விடும்.

ஸத்குரு தேவரின், அனுபவ வாக்கியமாவது:—
எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது யாமே!
யாமே அது! எனையறிதலே! பிறவா நிலையாகிய,
**ஜீவன்முக்தி** என ஸ்ரீ மஹான்கள் சொல்லக் கேள்விப்படுகிறோம்.



அன்பான குழந்தாய்! தேஷாந்திரி! இம்முறை மலையாத்திரை! முடித்து வந்த பிறகு, தினமும் இரண்டு! மூன்று! ஐந்து! என, ஸ்ரீமஹான்கள், இங்கு வந்து போகின்றனர். அவர்கள் ஸித்தர்களும்! யோகிகளும்! ஆகும். அனைவரும், மனம்! செயலற்றுப் போகும் நிலையாகிய, சர்வார்ப்பண ரகஸ்யத்தை, பிராக்கம் பெற்றுச் செல்கின்றனர். நேற்று முன்தினம், ஓர் ஸ்ரீமஹாத்மா! அதிகாலை, மூன்று மணி அளவில் வந்தார். அவர் நாமம்:- உத்தாலகர்! ஆகும். இவர் ஸ்ரீவஸிஷ்டர் (பிரம்மஞானி) காலத்தவர் ஆகும். இவரும் ஓர் யோகபுருஷரே! ஆனாலும், யோக ஸித்தியினால், ஆத்ம ஞான



விசாரம் செய்து, நானும் பெற்றவனானேன். இந்த ஏழை பாக்கியமும், எம் ஸத்குருநாதர் கொடுத்த, ஞான வாசிஷ்டத்தில், இவரைப் பற்றி, படித்திருக்கிறேன். இவர் ஓர் திடஞானி என, ஸ்ரீ குருதேவர் குறிப்பிட்டு சொல்லுவார். இம்முறை, மலையாத்திரையில் நடந்த, ஸத் ஸங்கங்களிலும், இவர் கலந்து கொள்ளவில்லை.

மேலும் ஓர் முக்கிய குறிப்பான ரகஸ்யம்.

(A) ஜீவன் முக்தி அடைந்த, ஸ்ரீ மஹான்கள், திரும்ப ஓர் தாவம், பெற முடியாது. பெற இயலாது.

(B) அவர்கள் உப்பு பதுமை என, பிரம்மானந்த சமுத்திரத்தில், கலந்தவர்களே.

(C) அவர்களை, வைத்து, ஓர் ஸ்வய அனுபவம் பெற வேண்டுமானால், மற்றோர் திடஞானியால் மட்டுமே முடியும்.



ஞானிக்கு எந்த (8) விருப்பமும் இல்லை யென்பதே ஸத்தியமாகும். இங்கு நோய்வாய்ப் பட்ட ஞானி யோகமாயாவை தன்னுள் அடக்கியதன்மை யால் சமசாதகர்கள் அனுபவத்திற்காக யோக மாயாவினால் மறைந்திட ஞானியின் பாவத்தை தற்காலிகமாக கொண்டு வர முடியும் (இது அனுபவ ஞானிகளின் கருத்தாகும்


(D) அந்திட ஞானி என்பவன், அவஸ்யம் **பரகருணை** பெற்றவனே!

(E) அந்திட ஞானி! அப்பரகருணையால் செயல் படாமல் இருப்பதால் **யோக**மாயாவின் துணை கொண்டு நாம் விரும்பும், மறைந்த ஜீவன் முக்தனுடைய, **தூலத்தை**, காரண சரீரமாக கொண்டுவர முடியும்.

(F) அந்த ஜீவன் முக்தனுடைய, காரண சரீர **ஸ்பீக்கர்** மூலமாக, அவர் அனுபவங்களை சங்கேதபாஷையில், **உணர்வு** நிலையில், கிரஹிக்க முடியும்.

இதை எவரும் அறியவோ! தெரியவோ! உணரவோ முடியாது என்பது, ஸத்தியம் என ஸ்ரீ ஞானிகள் சொல்வர்.

௭



ஏ அந்த ஜீவன்முக்தரின், காரண சரீரம் மூலமாக, இந்த திடஞானி! எந்த அநுபவம் பெற முடியுமோ? அந்த அநுபவம், பெற்ற மறு கணம், அந்த ஜீவன் முக்தரின், காரண சரீரமானது, காற்றில் கரையும்! **கற்பூரம்** போல், கரைந்து மறைந்து, அந்த ஒன்றுடன், கலந்துவிடும்! இதுவே **மறைந்த** திடஞானிக்கும்! **இருக்கும்** ” உள்ள ரகஸ்ய தொடர்பு ஆகும் என, ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம். இந்த நியதியில் வந்தவரே, எம் **உத்தாலகர்** என்பவராவர்.

அவர் சமயாசாரத்தினை மட்டும், இரண்டொரு வரிகளில் சுருக்கமாக தருகிறோம். உணரவும்!



இவரும், ஓர் ஒளி வட்டமாகவே வந்தார்.
அதற்கு ஒருநாள் முன்பு, இவரைப் பற்றிய, ஓர்
எண்ணம் **அறிவில்** தோன்றியது.


அந்த எண்ணம் :– ஸ்ரீ உத்தாவதரை தரிசிக்க வேண்டும்;
என்பதாகும்.
அதைபர கருணையும்! யோகமாயாவும்! நிறைவேற்றியது!
ஒளியில் வந்த வடிவத்தை, **ஜோதியை**
உணர முடியாமல், ஓர் விநாடி திகைத்து, பின்னர்,
ஓ மஹாத்மா! வந்திருப்பது யார் என்றேன்?
ஓ தாஸிதாஸனே! எம்மை நீ, இது வரை தரிசித்து
இருக்கமாட்டாய். ஆனாலும் **நீ வேறு!**
**யாம் வேறு** அல்லதன்!
**ஒன்றே!** அங்கும், இங்கும்! எங்கும்! என்றும்!
**துவைதம்** (துவைத பயம்) இல்லவே இல்லை.
அந்த உறுதியே **உன்!** வடிவம் என்பதையும், யாம் அறிவோம்
என்றார் ஸ்ரீமஹாத்மா.



உ

வைத்தியம்:- ஓ யோக புருஷோத்தமரே! ஹே
மஹாத்மா! இந்த ஏழை! அறிவால் உணர்ந்து,
எண்ணியதால் தான் தாங்கள் வந்துள்ளீர்கள்
என அறிவோம். தாங்களைப் பற்றி, ஞான வாஸிஷ்
டத்தில்! எம் ஸ்ரீ குரு தேவர் அட்டிக்காட்ட,
உணர்ந்திருக்கிறோம். யோக வலிமையால்,
மனதை அடக்கி! ஞான விசாரணையால்,
மனதை அழித்து! ஆத்மஞானம் பெற்றவர்
என்பதையும் அறிவோம்! மேலும் இம்முறை,
ஸ்ரீ பகவான் கருணையாலும், ஸ்ரீ மஹாத்மாக்களின்
ஏக்க வலிமையாலும், அனைவரும், ஓர் மாபெ
ரும் ஸங்கல்பம் வகுத்து, மெய்யன்பர்களையும்!
இந்த ஏழையையும்! ஹோமயாகத்து அழைத்து,
ஒரு ஸத்ஸங்கம்! நடத்தி முடிக்கசமயம், தாங்களை
யும், அங்கு எதிர்பார்த்தது இந்த ஏழை. ஆனால்
தாங்கள், திவ்விய தரிஸனம் கிடைக்கவில்லை.
ஆகவே தாங்களை, இங்கு எண்ணி தருவித்தோம். இந்த
ஏழையை மன்னிக்கவும்.


யோக புருஷர்:- ஓ பணிவின் பணிவான பாபாவே!
ஸ்ரீ ஸத்குரு தக்ஷிணாமூர்த்தி! அவர்களின் அழைப்பின்



ஸ்ரீ ஸத்குரு தக்ஷிணா (12)
மூர்த்தியின் அறிவாண்

அனைத்தும் வெகுரகஸ்ய
மாக இருந்தால் அவர்
மட்டுமே அறியவும்
உணரவும் முடியும். மற்றும்
ஞானியானால் காணமுடியாதும்.

மேரில், யாமும் கோர ஸத்ஸங்கத்தில்
இருந்தோம்.
எம் இருப்பை ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி ஒருவரே அறிவார்
„ „ வேறு எவரும் அறியார். அங்கு,
ஸ்ரீ ஸத்குருதேவரே! எம்மை தருவித்திருந்தார். அது
பிரம்ம ரகஸ்யம் ஆகும். இப்போது, எம்மை இங்கு
அழைத்த காரணம் என்ன?
வைத்தியம் :— ஹேமஹானுபாவா! வாஸிஷ்டத்தில்
ஓர் வாக்கியம் வருகிறது. அதுபற்றி எம் மெய்யன்பர்
கருத்தும், வரிவடிவிலும்! வாக்கு வடிவிலும்! சுட்டிக்
காட்டியுள்ளோம். இருப்பினும், அவ் வாக்கியத்தின்
தெளிந்து! தாங்கள் வாக்கால், வர
வேணுமென்று, இவ் வேழையின் வேண்டுகோள்.
அதை நிறைவேற்றுவது தாங்கள் கடன்?
அது சமயம், ஓர் ஒளிவட்டம் தோன்றி, அதன்
உள் இருந்து, எம் ஸ்ரீவஸிஷ்டர்
பிரான்! தோன்றிய வண்ணம், அவர் அமுத மொழியாவது
ஹே தாஸானு தாஸனே! தாஸிதாஸனே! அன்பர்க்கு
மெய்யனே! பணிவின் சிகரமான பாபாவே!
நம் வாக்கியத்தை யாம் நான், சொல்ல வேண்டும்




மேலும், அந்த உத்தாலகர் வேறு அல்ல! யாம்
வேறு அல்ல! யாம் வேறு! நீயும் வேறல்ல!
அனைத்தும் நமக்கு அன்னியமாயில்லை! நாமும்
அனைத்திற்கும் அன்னியமாயில்லை! என்பதே
ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!! என
பிரமாணம் உரைத்தவண்ணம், எம் ஸ்ரீ வஸிஷ்டர்
பிரத்தியக்ஷமானார்.
நாங்கள் இருவரும் (உத்தாலகரும், சைத்தியனும்)
ஸ்ரீ ஸத்குருவுக்கு பாத நமஸ்காரம் செய்து,
அவர் ஆசி பெற்று எழுந்தோம்.

ஸ்ரீ வஸிஷ்டர் :- ஓம் உத்தமோத்தமனே பாபா!
அவ்வாக்கியமாவது, ஓ ஆக பரிக்கம்பனம்.

(1) ஞானத்தின் சலனசக்தியே மனமாகும்.
(2) சலிக்கின்ற அம்மனமே நாமரூபஜகமாகும்.
(3) சலனம் அற்றால் அம்மனம் நசிக்கும்.

கருத்து
மனம் கெட்டு அழிந்தால் மட்டுமே
மேலும் [illegible] மட்டுமே நாமரூபம்
கெடும் என்பது ஸத்தியமாகும்




ஸ்ரீ உத்தாவதர் :- ஓம் ஆனந்தக் குழந்தையே பாபா!

(1) ஞானத்தின் சலனசக்தியே மனமாகும்.
ஞானம் என்றால் பிரம்மம் எனக் கொள்வாயாக.
அப்பிரம்மத்தை சமுத்திரம் என உணர்வாயாக.

(A) **பிரம்மம்** :- சமுத்திரம். இதை காலாதீத பரசொரூபம் எனவும் கொள்ளலாம்.

(B) **பரமாத்மா** :- குடஜலம். இது நீர் வைக்காத ஓர் அளவுக்கு **உட்பட்ட** ஜலம் என்று, கொள்ள வேண்டும் (மேலே சொன்ன பிரம்மத்தை, அகண்டம் என்றும், இங்கே சொல்லும் பரமாத்மாவை, கண்டம் என்றும் கொள்ள வேண்டும்)

(C) **ஜீவாத்மா** :- குவளை ஜலம். இது அஹங்கார, மமகார **கல்** வைத்தது ஆகும். ஆகவே இம்மூன்றுமே, சமுத்திர ஜலத்திற்கு அப்பாற்பட்டது இல்லை என்பதே ஸத்தியம். இங்கு குடம் & குவளை என்பது தான், வேறே தவிர, ஜலம் வேறு இல்லை என்பதே ஸத்தியம்.



(15)

மண்ணில் பாண்டம் இல்லை என்றும், மண் இல்லாமல் அம்பாண்டம் இல்லை என்றும், உணர்ந்தால் போதும். மண்ணாகிய பரம் உண்டு என்றும், அம்மண்ணில் எந்த நாமரூபமும் இல்லை என்பதே கருத்தாகும்.

குடத்தை **ஜீவன்** நிலை என்றும், குயவனை **ஈசன்** நிலை என்றும் கொள்ளலாம்.

வைக்கியம்:- ஹே மஹாத்மா! பிரம்மத்தின் சவன சக்தியென, எதைக் குறிப்பிடுகிறீர்கள்?


ஸ்ரீவஸிஷ்டர்:- ஹே பேரறிவின் சொரூப பாபா! வேதாந்தத்தை, அநுரகஸ்யமாக உணர்ந்த, அநுபவ ஞானிகள் சொல்வதாவது:- **ஒன்றுமில்லை** ஆனால் **ஒன்றுண்டு** என சொல்லுவார்கள். அது என்ன அர்த்தம்?

வைக்கியம்:- ஹே ஐயனே! ஒன்றுமில்லை யென்பதும் ஒன்றுண்டு என்பதையும், எதை? எப்படி? குறிக்கிறது?

ஸ்ரீ உத்தாலகர்:- ஓ எம் பாவ பாபா! ஒன்றுண்டு என்றால் காலாதீத **பரம்** உண்டு எனப் பொருள்படும். (ஒன்றுமில்லை)

ஒன்றில்லை என்றால் அந்த ஒன்றுக்கு அன்னியமாய் எந்த **நாமரூபமும்** இல்லையென பொருள்படும்.

வைக்கியம்:- நாம ரூபம் இல்லை யென்பது ஸத்தியமானால், அக்காலாதீத ஒன்றை, எப்படி கொள்வது? எப்படி சொல்வது?




(16)

ஸ்ரீ வஸிஷ்டர்:— அந்த ஒன்றை, உண்டு எனச் சொல்ல ஒன்றுமில்லாத தன்மையினால், அதை அகண்ட ஜோதி என ஸ்ரீமான்கள் சொல்வர். எந்த நாமரூபமும் இல்லை. ஒளிமய ஸ்வயமாக உண்டு.

வைத்தியம்:— அப்படியானால், சலன சக்தியென்பது, எப்படி உண்டாயிற்று?

ஸ்ரீ உத்தாலகர்:— ஹே மாமா! இதை ஸ்ரீமான்கள் எப்படி சொல்கிறார்கள் என்றால்? ஒன்று, நாமரூபமாய் உண்டாக வில்லையென்றும், அந்த ஒன்று, நித்தியமாய்! ஸத்தியமாய்! என்றென்றும் இருந்தது (இருக்கிறது) என்றும், அந்த ஒன்று தன்னைத்தானே! மற்றொன்றாய்! பிரித்ததென்றே! ஆக்கிக் கொண்டதென்றே! சொல்வராம்.

வைத்தியம்:— அப்படி, பிரிந்த ஒன்றுதான், அதன் சலன சக்தியா?



ஸ்ரீவஸிஷ்டர் :- ஹேபாபா! அதை இப்படியும், வைத்துக் கொள்ளலாம். அதை (பிரம்மத்தை) **சமுத்திரம்** எனவும், வைத்துக் கொள்ளலாம். ஆரம்பம் அது, **அலையற்ற** சமுத்திரம். அதுவே இரண்டுபட்ட நிலையில், **அலையுள்ள** சமுத்திரம் ஆகும்.

வைத்தியம் :- அப்படியானால், அதன் அலைதான் சலன சக்தி (அசையும் சக்தி) என சொல்லப் படுகிறதா?

ஸ்ரீஉத்தாலகர் :- அப்படித்தான் கொள்ள வேண்டும். அந்த அலையானது, ஆண் அலை! பெண் அலை! நுரை! என **விகாரம்** அடைகிறது.

வைத்தியம் :- இந்த விகாரம் எதனுடையது? அலையென்றும், அலையின் வேகம் என்றும், உண்டு பண்ணியது யார்? அலைவது எது?

ஸ்ரீவஸிஷ்டர் :- குழந்தாய் திருவடி :- ஒன்று ஒன்று கவே இருக்கும்போது, விகாரம் இல்லைதான்.



துவைதத்தை உண்டுபண்ணியதும், மனமே! தன்றல் உண்டான, துவைதத்தை கண்டு, ஞான கோடி கற்பனையால், பயம் அடைவதும் மனமே. இதே மனம் அறிவாகிவிட்டால் துவைதமும் இல்லை, அதன் பயமும் இல்லாமல் மறைந்துவிடும். மனம் அறிவானால் திரும்பவும் மனமாகாது. (18)

தொடரும்.

அதாவது **துவைதம்**! இல்லைதான். அந்த ஒன்று மற்றொன்றாய், மாறும் போது, துவைதமும் அதன் **பயமும்**! உண்டாவது இயல்புதானே?

வைத்தியம்:- இந்த துவைதமும், துவைத பயமும்! அடைவது எது? அல்லது எவர்?

உத்தாலகர்:- இது நல்ல உன் ஆழ்ந்த கேள்வியே!

(A) **அசைவு** என்றல் **மாயா** ஆகும்.


(B) அந்த அசைவினால், தோன்றும் கற்பனையான் **தோற்றம்**

அசைவான, அம்மாயாவின் மறுவடிவம் (மகனே) **மனம்** ஆகும்! மனமே துவைத பயம், அடைகிறது.

அசைப்பது மாயா! அந்த அசைவின் நாமரூப, கற்பனையின் தோற்றம்! **எண்ணம்** வடிவானமனம் ஆகும்.

இருவரும் இணைந்தவேளையில்:- ஞானமழை மையமாய் பாரீர்! இப்போது, முதல்வாக்கிய அர்த்தம் உணர்வானதா?

வைத்தியம்:- ஞானமுத்துக்கான மஹாவாக்கியங்களே, உணர்வுபூர்வமாக, உணர்ந்தோம். இனி அடுத்ததில் என்ன?



மனம் அறிவு என (19)
ஆனபின், கற்பனை
என்ற வார்த்தைக்கு
இடமேயில்லை. காரணம்
எல்லாம் நம்முடையதாகி
விடும். ஆகவே கற்பனை
இல்லை. அதே அறிவு
பேரறிவு ஆனால், எல்லாம்
நாமாகி விடுவோம். அங்கு
தான் நமக்கு அன்னியம் எவையுமில்லை என்ற,
அத்வைத பாவனா ஸ்தம்பம். முடிந்தது.

௨


சலிக்கின்ற அம்மனமே/ நாம ரூப ஜகமாகும்/
ஸ்ரீ வஸிஷ்டர்:- ஹே பாபாஜி! முன்பே சொன்னேன்.
அசைவே/மாயா/என்றும், அசைவால் தோன்றும்,
தோற்றமே/மனம்/ என்றேன்/ அதை எப்படி உன்
அறிவால் உணர்கிறாய்? உன்னிடம் மனமில்லை.
மனம் இருந்தால், இவ் உணர்வை பெற முடியாது. அங்கு
உணர்ச்சி தான், வெளியாகும். அவ்வுணர்ச்சியால்,

**கிளர்ச்சி** (மனச்சலனம்) உண்டாகும்


**அடங்கி** இருப்பது **உணர்வு** ஆகும்.

அடங்க **மறுப்பது உணர்ச்சி** ஆகும்.

ஐக்கியம்:- ஹே பிரபோ! ஸத்திய சொரூபா!
தோன்றுவது/ மாயா! என்றால், அது **இயற்கை**!
அப்படி இயற்கையாக இருப்பதையும்/ தோன்றுவதையும்/
மாற்ற **நாமரூப** மடிப்பில்! உரிமையும்/ உடைமையும்/
கொண்டாவதே, **மன மடமையாகும்**/



வைத்தியம் :- இதன் உண்மையை, எப்படி உணரமுடிகிறது என்றால் :- பிரம்மமாகிய, காலாதீத பரசொரூபமானது, **இயக்கம்** அற்ற தன்மையானால், இயற்றுவதற்காக, **தாமே தம்முடைய மாயாவை**, தன்னுள் இருந்தே, தோற்றுவித்துக்கொண்டு, அம்மாயாவை **பற்றிய** நிலையில், **ஈசன்** என்று, ஸ்ரீ பகவான் ஆனது. தம் அசைவினால், **நாமரூப** ஜகத் தோற்றத்தை, உண்டாக்கியது. அவை அனைத்திலும், ஸ்ரீ பகவானாகிய தாமே, நிறைந்து கொண்டது. பின் ஸ்தாவர வர்க்கங்களாகவும், அனந்த ஜீவ கோடிகளாகவும், மனிதஇனத்தவிர, நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன, கிருமி கீடகமாகவும் உண்டுபண்ணி, அவைகளில், தாம் **அறிவு** சொரூபமாக நிறைந்து, **மனம்படைத்த** மனிதனால் ஆட்டிவைக்கப்பட்ட **மனிதனுக்கு** மட்டும், **தேவை**ப் பொருள்களாக,






ஆக்கிக் கொண்டது. இங்கும், எல்லா நாம ரூபங்க
ளும், அந்த ஒன்றுக்கு, அன்னியமில்லை யென்பதே,
ஸத்தியமாகும்.


ஸ்ரீ வஸிஷ்டர்:- ஹே ராமா! இது ஸத்தியமான
உணர்வாகும். இந்த நாமரூப பேத உணர்வு,
எப்படி உண்டாகிறது என்றால்? இந்த பேத மனதினில்
தோன்றும், **விருப்பும் வெறுப்பும்**
அதாவது, ராகத்துவேஷாதிகள் இவைகள் தன்மை
யால், முதலில் **பேதம்** தோன்றும், அந்த
பேத தோற்றத்தினால், ஸங்கல்ப விகல்பம் என்று
சொல்லக் கூடிய, **தோற்ற**ங்களை **கற்பனை**
இயல்பாகவே, எந்த முயற்சியும் இல்லாமல்,
இம்மனதால், தோற்றுவிக்கப்படுகிறது.

ஸ்ரீ உத்தாலகர்:- குழந்தாய் பாபா! விருப்பும்
வெறுப்பும், இல்லையானால், இது வேண்டும், இது வேண்டாம்,
என்ற, பேதம் தோன்ற மார்க்கம் இல்லை. இந்த
விருப்பு வெறுப்பினால், தோன்றும் பேதபாவனையானது,



குற்றம் குறையாக தோன்றினால் தான் லௌகீக ரஸனையும், பிணைப்பும் நிரம்பவும். தெய்வீகத்திற்கு ஓர் திரையும், ஏற்பட வாய்ப்பு உண்டு. எல்லாமே தெய்வீகமாகவும், பரமார்த்திகமாகவும், மாறிவிட்டால், உலகம் என்ற அர்த்தம் அற்றுப் போகும் என்பது ஸத்தியமே.

வைத்யம்:- நாம் அனைவரும், அறிவு பூர்வமாக இருப்பதால், இவ்வுண்மையை, உணரவும் முடிகிறது. ஆனந்தமாகவும் ஏற்கவும், இருக்கவும் முடிகிறது. ஆனால் ???????????????? சற்று விபரம் தெரிந்தவர்களும், மற்றும் சாதனை என்ற படி ஏறி வருபவர்களும், மன மிரட்சியினால், கதி கலங்கிப் போய், அவர்கள் கேட்கும் கேள்வியாவது?



தெய்வத்தையும்! பரத்தையும்! சுட்டிக்காட்டி,
**ஏன்** இந்த விளையாட்டு? அவனோ! அதுவோ!
சும்மா சுகமாக இருக்கவராமே? என சலித்துக்கொண்டு;
**நாமே** அறிவின்! ஆனந்தம் என உணராமல்,
பொறுமையின்! சாதகனை எத்தனை **கஷ்டம்**
என **மனதால்!** சலிப்படைகிறோம்.


மனம்தானே, அனைத்துக்கும் காரணம் என, மன எண்ணத்தை விடுத்து, **அறிவாக** உணர முடிவதில்லை.
இது **மனதின்!** ஆட்டம் என, ஒருவடி
உணர்ந்தால், போதுமே! கலக்க துக்கமயம் சஞ்சலம்
எல்லாம் அத்தனையுமே, நாசமாகுமே! பாவம். அவர்கள்
மனம்! அவர்களை, இந்த பாடுபடுத்துகிறது.
மனதின் பாரத்தை நான்! நான்! என திரும்ப
திரும்ப, அழுத்தி! அழுத்தி! மேலும் மேலும்!
பாரமாக்குகிறார்களேயன்றி, எல்லாம் நீயே
என, மனதை விட்டு, விட்டு அறிவில் நிலைத்து நிற்க,
முடியாமல் சஞ்சலப்படுகிறார்கள்.



பரசொருபம் (24)
என்பது அசை
யாததும் செயல் படா
ததாகவும் இருப்பதால்
அதை உதாரணமாக
மண் என விளக்கம் கொடு
க்கிறார்கள் மண்! பரம்!
ஆகாது! பரம்! மண்! ஆகாது
பொய்மையை சுட்டிக்காட்டி மெய்க்கு விளக்கம்
கொடுப்பது ஒன்றே! ஆகவே பரத்திற்கு எதுவும்
உவமானம் இல்லவே இல்லை.

ஸ்ரீ உத்தாவகர் :- ஒப்பணிவான எம்பாபாஜீ!

சலனம் (சலிப்பு) அடைகின்ற மனமே!
நாமரூப! ஜக ஜீவ, தோற்றங்களாகின்றன,
அவ்வாமல், நாமரூப, ஜக ஜீவ, தோற்றம் இல்லவே இல்லை
அறிவு ஊன்றி, உணர்ந்து பார்த்தால்,
அசையும் நிலையால், ஸ்ரீபகவானின் பொருள்
அவன் செயலாகவும் தோற்றும். ஆகவும் உ
அசையா நிலையால், பராசொருபம் தோன்றுத்
தோற்றமாக! மண் மயமாகவே தோற்றும்.
இதன் முடிவு :- மனதின் குற்ற உணர்வின், கற்பனையே
நாமரூப, ஜக ஜீவ தோற்றமாகும்.
அத்தோற்றமே எனது! உனது! என போட்டி பொறாமை
பேராசையால், விரோதங்களும் அறிவே நாமாகவும்,
அறிந்தும் நாமாகவும்! அறிவால் உணரக்கடவே,
இந்த அனர்த்தம் ஆகும். (இது மனக்குழப்பமே தவிர
வேறொன்றுமில்லை.)



ஸ்ரீ வஸிஷ்டர்:-

③

சலனம் அற்றால்! அதாவது சலனம் அழிந்தால்!
அதாவது கற்பனையின் அசைவு நசித்தால்! அதாவது
நான் & நீ! எனது & உனது!
என்றும் & உன்றும்! என்ற
அஹங்காரம்! அதிகாரம்! ஆதிக்கம்! அபிமானம்!
இவைகளின் உடைமை & உரிமை!
முழுமையாக நாசமாகி, விருப்பு வெறுப்பால்!
தோன்றும், பேத உணர்வு நாசமாகி! அப்பேத
உணர்வால் தோன்றும், குற்றம் குறை கற்பனையும்!
சர்வநாசமாகி, சர்வார்ப்பண நிலையில்! எல்லாம்
நீயே! எல்லாம் உன்னுள்! எல்லாம் உனதே!
என்பது, பரிபூரணமானால், இம் மனதின்
ஜீவ கர்த்தத்துவம் அழியும்! ஈச கர்த்தத்துவம்
நிலை பெறும்.
இதுவே மன அசைவு நிற்கும், நிலையாகும்.
இதுவே மனம், பக்குவப்படும் நிலையாகும்.



**திட்டமிடுவது (26)** என்பது மன எண்ணமும், அந்த எண்ணத்தின் விளையும், இணைந்ததாகும். இதற்கு இம்மனமே காரணம் ஆகும். இவற்கு மாயாவோ, ஸ்ரீபகவானோ காரணமாகாது, காரணமாக இயலாது.

**வைத்தியம் :-** ஓ எம் ஐயனே, இந்நிலை பெற, ஓர் ஆத்ம சாதகன், என்ன செய்ய வேண்டும்?

**ஸ்ரீ உத்தாவகர் :-** ஓ எம் அருமை பாபா, இதை கவனி, இருப்பதிலும், கிடைப்பதிலும், நடப்பதிலும், போவதிலும், வருவதிலும், கொடுப்பதிலும், வாங்குவதிலும், இவை அனைத்தும் விதியின்படி,

**திட்டப்படி** முன்னேற்பாடாக,

**பாரபக்ஷ** தோஷமில்லாமல்,

அவரவர் **பற்றுவரவு** தீர்க்கப்படுகிறது,

இதில் மனப் போராட்டத்திற்கு இடமே இல்லை,

எனத் தெளிந்து, இது ஸ்ரீபகவானின் கருணையே எனத் துணிந்து, எல்லாம் நலமே, எல்லாம் நலமே, என, அடங்கி இருந்தால், **மௌனம்!**

மௌனம், மௌனம், மௌனம், மௌனம், பக்குவப்படும்.

இது இந்த ஏழையின் அனுபவமான அவ் வைத்தியத்தை, சுட்டிக்காட்டினார்; எம் உத்தாவகர்.



27

இதில் கூறிய
அப்பா & புள்ளி
விளையாட்டெல்லாம்
வாக்கிய விளக்கமே.

உண்மையென நம்பவேண்டாம்
இந்த நாமரூப சொந்தபந்தம்
ஏது? எல்லாம் ஒன்றே! அதுவே யாம்!
யாமே அது! (இது உபசார வசனமாகும்)

வைத்தியம் :- ஹே பிரபோ! ஓ மஹாத்மா!
ஓ எம் தந்தையே! நீர் சொல்வது விந்தையே!
இந்த ஏழை வைத்தியத்தின் அனுபவம், உமக்கு
எப்படி வந்தது? எப்படி தெரியும்?


ஸ்ரீ உத்தாலகர் :- ஓ எம் அருமை பாலகா பாபா!
உன் வாக்கே **தந்தையே! விந்தையே!**
என வந்து விட்டதே. அது போதாதா! உன் வாக்
கை வரவழைத்தே, உன்னை மடக்கினேம்.

வைத்தியம் :- புரியவில்லையே பிரபோ!

ஸ்ரீ உத்தாலகர் :- யாம் **ஆறுமுறை**
உன்னோடு வந்தவனேம். இப் போதும், உன் யும்!
னோடு இருக்கிறேம். அப்படியானால், யாம்
தந்தையானது விந்தையில்லையே!

வைத்தியம் :- ஓ எம் அருமை அப்பா! நீர்
என்றென்றும், எம் அப்பாவே! யாம் என்
றென்றும், உம் குழந்தையே! இது வைத்தியம்.

ஸ்ரீ வஸிஷ்டர் :- ஓ மஹாத்மாக்களே! உங்கள்
அப்பா! புள்ளி! விளையாட்டு போதும்.




ஸ்ரீ வஸிஷ்டர் :- ஓர் சிறிய கேள்வி? இதற்கு எவர் பதில், சரியாக இருக்கிறது எனப் பார்ப்போம்?

இருவரும் இணைந்து :- ஓ ஸத்குரு நாயகா! இந்த போட்டியும் வேண்டாம். அது பொறாமையால், பிளக்கப்பட்டதாகும். எந்த கேள்வியானாலும், தனித்தனியாக கேளுங்கள். தெரியாவிட்டால், தாங்களே கிருபை கூர்ந்து, விளக்கி அருளுங்கள்? போட்டி வேண்டாம் குருநாதா! என அவர் திருவடிகளில், இருவரும் பணிந்து வேண்டினர், கண்ணீர் கரைபுரண்டு ஓட!

ஸ்ரீ வஸிஷ்டர் :- ஓ எம் அருமை செல்வங்களே! இது தான் சரியான **அனுபவ** பாடமாகும்.


**போட்டி & பொறாமை!** கலி தோஷ குணங்களாகும். இங்கு ஒருவருக்கு ஒருவர், விட்டுக் கொடுக்காதல், அது சாதனையின் **பொறுமையின்** சிகரமாய் அமையும். பொறுமை! எளிமை! இனிமை! பணிவு! கனிவு! இவைகளுக்கு, மிஞ்சிய எந்த சாதனையும் இல்லை.



இருவரும் இணைந்து :— தாங்கள் **ஆசி!**
அது எங்கள் **பாக்கியம்!**

ஸ்ரீவஸிஷ்டர் :— இந்த ஏழையான, பைத்தியக் காரபாபா! எங்கும்! எதிலும்! பணிந்தே போவ தனால், அனைத்தையும், எளிதாக சாதித்து விடு கிறான். இந்த **வரவில்** (இப்போதுள்ள நேரத்தில்) வேதசாஸ்திரம் கல்லாதவன் என, நம்மை முறையோடு சொல்லிக் கொள்கிறான். ஓர் பரிசை வைப் போம் இவனுக்கு; என சொல்லிக் கொண்டே, ஏறு குறும்பும்! குழந்தை உள்ளமும் கொண்ட எம் அருமை பாபாவே! ஓர் சிறிய கேள்வி?


**வேத, வேதாந்த, ஸாஸ்திரங்களின்!** வரிசைப்படுத்தியும்!
அதன் உள் **ரகஸ்யத்தையும்**
சற்று சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறு பார்ப்போம்?



ஸ்ரீ உத்தாலகர்:— ஹே பரம் பொருளே! இது என்ன கேள்வி? இந்த அனுபவம், பாபா விடம் இல்லையே! இப்படி கடும் பரீக்ஷை வைக்கலாமா? (என கை கட்டி, வாய் பொத்தி நின்றார்)

வைத்தியம்:— ஒரு கணம் செயலற்று போனது. மறு கணம்! ஸ்ரீ குருதேவர் (ஸ்ரீ வஸிஷ்டப்பிரான்) திருவடியில், சாஷ்டாங்கமாக விழுந்தது. எழுந்து, அமைதியாக நின்ற நிலையில் கண்ணருவி பெருக்கெடுத்து ஓட → (அவர் அருளால்) → **பணிவுடன்**

வந்த வாசகம்:— கேள்வியும் நீயே! அதன் பதிலும் நீயே! அதன் கருத்தும் உனதே! இது ஸத்தியம்! இது ஸத்தியம்! இது ஸத்தியம்! இதுசமயம் ஓய்! ஓய்! ஓய்! ஸ்ரீ ரிபுமஹாத்மா! ரிபுதேவனே! ஓடிவாரும்! ஓடிவாரும்! இங்கு நம் ஏழையான பாபா! ஓர் **ஸத்திய பிரமாணம்** எடுக்கிறான். இது ரொம்ப! ரொம்ப! முக்கியமானதாகவும்! அதி! அதி! அதி! ரகஸியமானதாகவும்! இருக்கும் போல் தெரிகிறது?




இப்போது விட்டு விட்டால், எப்போது இது நமக்கு சாத்தியமாகுமோ தெரியாது? என கூறியவண்ணம்! எமதம்பன்! திருடாகிய கண்ணனும்! ஸத்குரு ஸ்ரீ ரிபு மஹாத்மாவும்! அங்கு பரப்பிரத்யக்ஷமா ஞானிகள் (பரப்பிரத்தியக்ஷ நிலை என்றால்; பர சொரூப அம்சமாக வருவதாகும். பிரத்தியக்ஷ நிலை என்றால்; ஸ்வரூபிகளாக, அவர்கள் வேஷம் தாங்கி வருவதாகும் என, ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம்)

ஸ்ரீ ரிபு:- ஹே மஹானுபாவா மாமா! எங்களை ஏன் அழைக்கவில்லை?

வைத்தியம்:- ஓகோ! ஓகோ! நீங்கள் இருவரும், தனியே இருக்கின்றீர்களா?

ஸ்ரீ கண்ணன்:- ஹே மஹாத்மா! இவனிடம், பேசி நாம் வென்றி கொள்ள முடியாது. அடங்கி இருங்கள். இவன் பிரமாணத்தை உணர்வோம் என, அமைதியானான் எம் கண்ணன்.





வைத்தியம்:— அதன்நிலையில் இருந்து, அதுவாக விளக்கம் தந்தது:—

**ஹே மஹத்துக்களே / ஹே மஹாத்மாக்களே!!** இதை உணர்வீர். (பரசொருப ஸ்திதி, மஹத்துக்களாகவும், இறை சொருப ஸ்திதி, மஹாத்மாக்களாகவும், ஸ்ரீமஹான்கள் பொருள் கொள்வர்) முறையே ஸ்ரீமஹான்கள் சொல்வதாவது:—


மேலிருந்து கீழ்!

வேதாந்தம்! வேதம்! ஸாஸ்திரம்! ஆகும்.

கீழிருந்து மேல்!!

ஸாஸ்திரம்! வேதம்! வேதாந்தம்! ஆகும்.

இதில்? சாதகர்களாகிய, **நாம்** கீழேயிருந்துதான், மேலே செல்ல வேண்டும். அப்படி உணரும் போது?





**சாஸ்திரம்:**— இது ஜீவர்களுக்கு மோக்ஷ சாதனையான நியதிக்கும்! **கருவிக் கரணம்!** ஒரு நோக்கமாகும். ஓர் இல்லறவாசி! எப்படி நடக்க வேண்டும்? ஓர் துறவறவாசி எப்படி நடக்க வேண்டும்? என்ற **விதி** முறையான ஓர் **கட்டுப்பாட்டை** வலியுறுத்திக் கூறுவதாகும்.

இதன் முக்கிய கட்டுப்பாடு:— **நாவு** அடக்கமாகும்.

சொல்வாயும்! செயல்வாயும்! எந்த ஜீவனுக்கும் ஓர் துன்பம் செய்யாதே என்றும், பிறர் அப்படி உனக்கு தெரிந்தோ! தெரியாமலோ! துன்பம் செய்தால் அதை

**மற! மன்னி! விட்டுகொடு**

என்பதே சாஸ்திர விதியின் முக்கியமாகும். இதில் இறை உணர்வு இருந்தால், அனைத்தும்



ஸாஸ்திரத்தை (34)
தலை வணங்கி,
பொறுமையுடனும்,
பணிவுடனும் ஏற்றுக்
கொண்டால்?
வேதம் தெரியாது. அது
தெரியவும் வேண்டாம்.
வேதத்தின் ரஹஸ்யத்தை,
உணர்வாய். இதன் ரகஸ்யம்
சர்வார்ப்பணம் ஆகும். தொடரும்.

சுகமாகவும்! அதி சுலபமாகவும்! அழகமாகவும்!
இலகுவாகவும் கூடியும் என்பது ஸ்ரீ மஹான்களின்
கருத்தாகும்!

**வேதம்:-** ஓர் நாமரூப மூர்த்தி,
ஸ்ரீ பகவானைப் பற்றி, கூறக்கூடியதும், அந்த
ஸ்ரீ பகவானை அடையும் **பக்தி** மார்க்கத்தைக்
கூறக்கூடியதும் ஆகும். பூஜா விதிகளும், அதன்
மந்திரங்களும்! ஆராதனை! ஆரத்தி! அபிஷேக நிவேதனம்
இவைகளே, இன்றைய பக்தி ஆகும்! மேலும் வேள்வி,
ஆலய பிராணப் பிரதிஷ்டை, மூர்த்தியின் மந்திரப் பிரதிஷ்டை,
எனபலவும் உண்டு. இது **புறச்செயல்** பக்தி
மார்க்கம் ஆகும். ஆக ஒட்டு மொத்தமாக சொல்வது
என்றால்! சாஸ்திரம் **ஓர் ஜீவன்** கடைத்
தேறும் மார்க்கம் என்றும், வேதம் தேவ தெய்வ
**ஸ்ரீ பகவானை** சுட்டி உணர்த்தக் கூடியது
என்றும் உரைப்பாம்.




வேதத்தின் ரகஸ்யம்! ஸத்தியமாக உணரப் பட்டு விட்டால், வேதாந்தம், யாடம்பயமாக இராது. ஸ்வய அனுபவம் ஆகும். அவ்வனுபவமானது தோஷ குணம் நசிக்கு நிலை! ஆனந்தம் நின்று நிலைக்கும் நிலை! என்று ஸ்ரீமஹான்கள் வாயிலாக உணர்ந்தோம். அறியவியலும் முடிந்தது.

**ஜீவன்** நிலை சாஸ்திரம்! **பகவான்** நிலை வேதம் என்றும் அறிந்துணர்ந்தால் போதுமானது.

**③ வேதாந்தம்:**– இது **ஞான** நிலையாகும். இது அத்வைத நிலையாகும்! இது தன்னை அறியும் அறிவோடு கூடியதாகும்!

**கிரந்த** பாஷ்யங்களும், **மந்திர** பாடங்களும், **உபநிஷத** ஸாராம்சங்களும், எல்லா **வேதாந்த** கருத்துக்களும் வேதாந்தமல்ல.

அதன் **கலையின்** அனுபவமும்! அந்த அனுபவம் வேறு **நாமரூப!** ஜகத் ஜீவ ஈசன் எல்லாம் ஐக்கிய நிலையில் இல்லையெனத் தெளிந்து.



(36)

① ஸாஸ்திரம் ஜீவர்களுக்கு.

② வேதம் பக்தர்களுக்கும் ஸ்ரீபகவானுக்கும்.

③ வேதாந்தம் ஞான பாடம் அல்ல. ஞானானுபவ நூலாகும். கிரந்தம் என்ற மானுடயல்ல. உன் உணர்வின் அனுபவம் ஆகும் என ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேள்வி!


எல்லாம் இருப்பின் நிலையில், நாமரூபமாக இல்லவேயில்லை! காவாந்த **பரஸாரூபம்** ஒன்றே ஸத்தியம்! அதுவே நாம்! நாமே அது! என அசை வற்று **பிரம்மானந்தமாகவே!** இருப்பதுவே வேதாந்தம் ஆகும்!

ஸ்ரீகண்ணன் :- சபாஷ்! குட்டி கண்ணா! சபாஷ்! என்றான்.

ஸ்ரீஉத்தவர் :- ஹே பணிவின் பாபா! நீ கூறிய அம்ருதம் ஸத்தியமே!

ஸ்ரீவஸிஷ்டர் :- நேசம் அன்பின் மகிமையே! இதுவே எம் கருத்தும்! யோக குரு ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திகளின் கருத்தும் ஆகும்.

ஸ்ரீரிஷு :- ஹே தாஸியாபா! உன் கருத்தை, எப்படி உணர்கிறோம் என்றால்? உன்னுடைய ஸ்வய ஞானானுபவ பாடலில், 72 வது பாடலில் **கடைசி** வரியில் வரும், நான்கே! போதும்! அதாவது?




ஒருமை யென்றும்! இருமை யென்றும்! ஒன்றுமில்லை.
உள்ள தெல்லாம் அகண்ட பரம்பிரம்மந்தானும்.
பரவிய அப்பரம்பிரம்மம் **நாமே** என்று,
பாவித்து! பாவித்து! பாவித்து! பரமே ஆவாய்.

இதன் கருத்து.

(மேலே உள்ள, இருவரிகளையும், சுற்றுமாற்றி போடவும்)

(1) இருமையென்றும்! ஒருமை யென்றும்:- வேதம் என்றும்! வேதாந்தம் என்றும்! அதாவது, ஸ்ரீபகவான் பக்தன் என்றும்! காவாகிதபரம் என்றும்! சொல்லும் **வேற்றுமை** இல்லவே இல்லை.

(2) உள்ள தெல்லாம், அகண்ட பரம்பிரம்மம் தானும்.
**ஜக! ஜீவ! ஈஸ்வராதிகள்** (தூலமாகவும் சூட்சுமமாகவும்) என்ற **நாமரூபங்கள்** இல்லவே இல்லை.
அதாவது பாண்டமாக இல்லை. மண்ணாக இருக்கிறது.






அதாவது?
மண் இல்லாமல் பாண்டம் இல்லை. மண்ணில் பாண்டம் இல்லை,
பரம் இல்லாமல், ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளின், நாம
ரூபம் இல்லவே இல்லை. ஆனால்?
பரத்தில், ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகள், எந்த நாம
ரூபத்துடனும், இல்லவே இல்லை.

③ பரிய அப்பரப்பிரம்மம், நாமே என்று,
எங்குமாய், ஏகமாய், எல்லாமாய், பரந்து,
விரிந்து! பரவி இருக்கும் அப்பரம் நாமே என்று,

④ பாவித்து, பாவித்து, பாவித்து, பரமே ஆவாய்,
யத்பாவம் தத் பவதி, என்ற நியதியால், பிரம்மாண்மை,
பாவனையை, இடையறாது, ஜெபதாரை போல்,
செய்து வந்தால், அனுபவம் பெற்று, அதுவே நாம்,
நாமே அது! என ஆவர். இது ஸத்யம் என
முடித்தார் எம் ஸ்ரீ ரிபு மஹர்ஷி.



உண்மை உணர்வின் ஞானமானது எத்தனை முறை திரும்ப திரும்ப படித்தாலும்! கேட்டாலும்! மேலும் மேலும்! புது புது விளக்கம் கருத்து மாறுபடாமலும்! வேறுபடாமலும்! சுவைக்க முடிவுமேயல்லாத சலிப்பு தட்டுவதில்லை.

தொடரும்.

வைத்தியம்:- ஓம் மகாத்மான மகாத்மா! **பிரம்மஞானி** என்றுபட்டமானது **ஓர் பிரம்மஞானி**யால் தான், கொடுக்க முடியுமே யன்றி, ஏனையோரால் **ஸ்ரீ** கர்த்தாக்களாலும் கொடுக்க முடியாது! என்றும், கொடுக்க கூடாது! என்றும், கொடுக்க இயலாது! என்றும், அனுபவ ஞான ஸ்ரீமகான்களின், வாக்கிற்கு இணங்க, ஓம் ஸ்ரீ **ஞான வாசிஷ்ட** கர்த்தாவே! **வசிஷ்ட பிரானே**! நாங்கள் திருவாக்கில், சுவைத்து உணர்ந்த, ஓர் வாக்கியத்திற்கு, மேலும் அவையான, விளக்கம் கேட்கலாமா? தாங்கள் அனுமதிக்கலாமா?

ஸ்ரீவசிஷ்டர்:- கேளுங்கள் பாபா! தைரியமாக கேள். அதற்காகத்தானே, யாம் உன்னைத் தேடி வந்தோம். இன்று உன் கேள்வி, அனைவர்க்கும் பயனுடையதாக இருக்கும், என்றது வைத்தியம்.

கண்ணன்:- ஹே குட்டிக்கண்ணா பாபா! உறவு! உறவு! விடாதே! (என்று சிரித்தேன்)



முன்பக்க தொடர்ச்சி (40)
அப்படி சலிப்பு ஏற்படுமாயின் நீ உன் மனதை உள் நோக்கி செலுத்தவில்லையென்றும் வெளிமுக நுகர்ச்சியில் ஈடுபடுகிறாய் என்றும் பொருள்படும். அது உணர்வு உள்ளவர்களுக்கே மேலும் மேலும்! தெளிந்து கிடைக்கும்.
முடிந்தது.

வைத்தியம்:- இந்த ஏழையின் கேள்வி இதுதான்?

(A) **தத்துவ ஞானம்!** அதாவது;

(B) **வாஸனா க்ஷயம்!** அதாவது;

(C) **மனோ நாசம்!** அதன் பயனே;

(D) **ஜீவன் முக்தி!** என்பதை மட்டுமே!

வரிசைக் கிரமமாக, விளக்கினால் போதும்????

ஸ்ரீ உத்தரவாகிறது:- ஹே வைத்தியநாதா! அப்பாவின் கேள்வி நன்றே! ஆனால், நான்கின் நிலையிலே! விளக்கம் கேட்கிறாய். இது ரொம்ப! ரொம்ப! முக்கியமானதே! யாமும் நாதர்களிடம், இவ்விளக்கம் கேட்டும் இருக்கிறோம். சில மெய்யன்பர்களுக்குமே, இவ்விளக்கம், கொடுத்தும் இருக்கிறோம். இந்த பாபாவும் இவன் அனுபவ வழியிலும், இதன் விளக்கம், தெளிவாக சொல்லுகிறேன். ஆனாலும், ஆத்ம ஞானம் என்பதே **சிரவணம்!** தான், மிக மிக மிக, முக்கியமானதாமே.



உ

தத், த்வம், (41)
என்றுவே ஜீவாத்மா
பரமாத்மா ஆக முடியும்
என்ற பொருள் இல்லை.
பரமாத்மா தான்
ஜீவாத்மாவாக தோற்று
கிறார் என பொருள் கொள்ள
வேண்டும் என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

ஸ்ரீ வஸிஷ்டர் :- தத்துவ ஞானம் :- பணிவான்

ராமாவே! **தத்(த்)துவம்** என்றுவே,

தற்பத, வாச்சியமாயிருக்கின்ற, பரமாத்மாவும்!

த்வம்பத, வாச்சியமாயிருக்கின்ற, ஜீவாத்மாவும்!

**தொழிலால்** பேதமன்றி **இருவரில்**

எந்த பேதமும் இல்லை. என்பதே ஸத்தியம். அதாவது

பரமாத்மா என்றால், ஸ்ரீ பகவான் என்ற ஈசன்!

மாயாவை உடையவன். அதாவது மாயா

இவன் மாயாவை உடையவன். அதாவது மாயா

வை, தன்வசம் கொண்டவன். அத்தன்மையினால்,

**ஸ** கர்த்தத்வத்தோடு, முத்தொழில் புரிபவன்.


இப்பரமாத்மாவானவன், இவன் பற்றாயிருக்கும்,

மாயாவையும்! அம்மாயாவின் முத்தொழிலையும்!

எந்த விநாடி விடுகிறானோ! அந்த விநாடியே! இவன்


பர சொரூபம் என்ற, காலாதீத பரம்பொருளாவான்

என்பது ஸத்தியமே!



ஆத்ம ஞானம் என்பது (42) ஆரம்பம் பல பல பார்க்கலாம். அதில் ஒன்றில் சுவை அனுபவம் ஏற்பட்டு விட்டால். மற்றும் அனைத்தையும் ஓரம் கட்டி விடவேண்டும். பின் உனக்கு சுவையை எது கொடுக்கிறதோ அதினுள்ளேயே திரும்ப திரும்ப சுவைத்து மூழ்கி கரைந்து விடவேண்டும். தொடரும்.

(இ) ஜீவாத்மா என்றால், மனம் படைத்த மனிதன் ஆவான். இவன் மனதை, தான் பற்ற முடியாமல், அம்மனதின் **பிடியில்** அகப்பட்டவனாகும். இவன் **ஜீவ** கர்த்தத்துவத்தோடு **மனதால்** பிணைக்கப்பட்டு, **நான் சம்சாரி** என்ற, அறியாமையின் மயக்கத்தில் இருக்கப்பட்டவன். இவன் ஸத்குரு கிருபையால், அறியாமையின், மயக்கம் கெட்டு அழிந்து, நான் ஓர் பந்த ஜீவன், நான் ஓர் சம்சாரி என்ற போதை மயக்கம் நீங்கி விட்டால், இந்த ஜீவாத்மாவானவன், ஜீவ போர்வை நீக்கப்பட்டவனாய், **நாம் ஆத்மாவே** என பிரகாசிப்பான். இவனுடைய, அறியாமையின், ஜீவ மயக்கம் என்பது, இவன் **மன** அஹங்காரம், மமகாரம் ஆகும்.




(3) இந்த தத்துவ ஞானத்தால் உணர்வதாவது:-

**நான்** ஆணுமல்ல, பெண்ணுமல்ல, இனம், மொழி, மதம், நாடு, காலம், இவை ஒன்றும் **எம்முடையதல்ல, யாவும் அல்ல** என்ற திட உணர்வின், வைராக்கியம் பெறுவதே, தத்துவஞானம் ஆகும்.

ஸ்ரீ உத்தாலகர்:- வாஸனாக்ஷயம்:-


மேலே கூறிய, தத்துவ ஞானமானது, பரிபூரணமாக அனுபவம் பெற்றால் தான், வாஸனாக்ஷயம் பெற முடியும். **வாஸனா** என்றால், குண தோஷம் ஆகும். இக் **குண** தோஷம், **மனதின்** பிணைப்பு ஆகும். மனம் என்றால், கற்பனையில் தோன்றும், **எண்ணம்** ஆகும். இந்த எண்ணமானது,




உ




**நாமரூப** தோற்றத்தைப் பற்றி எழும்.
இந்த நாமரூபத்தை, தேவைகளையும், ஆசைகளையும்,
**பேராசையால்** பெருக்கிக் கொண்டு
எனக்கு, உனக்கு என்று போட்டி, பொறாமையால்
**உடைமையும், உரிமையும்,**
பாராட்டி, **சொந்தம்** கொண்டாடுவதால், இப்பிறவியே, புண்ணிய பாபம் என,
குண தோஷ வாஸனையால், இம்மனதைப் பற்றி
கொண்டது. இந்த குண/மன வாஸனையை விடுவது
என்றால் :- அதாவது வாஸனா க்ஷயம் என்ற நிலையில்,
**வாஸனா நசிக்க :-** இரண்டு
மார்க்கம் உண்டு என, ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.



ஒன்று:— பலன் கருதாமல், செய்த பூர்வ புண்ணிய சுகிர்தமானது, **தர்மமாக** மாறியும்! அதனால் பூர்வத்தில், ஓர் ஸத்குரு கிருபை பரிபூரண கிட்டி இருந்தும்! **ஸ்ரேயஸ்** நீ பெற்றிருந்தால்! எல்லாம் பரமாகிய மண்ணே! மண்ணாகிய பரமே எல்லாம்! எல்லாம் நாமே! நாமே எல்லாம்! நமக்கு அன்னியம், எதையும் இல்லை என்ற, பரவுணர்வாகிய **அகண்ட பாவம்!** பாவனையை, மேற்கொண்டால், நாமரூப, ஜகஜீவ, தோற்றமும்! ஈசுவராதிகளின், மயக்க போதையும், இல்லாமல் பண்ணும் **வாஸனாக்ஷயம்** (அதாவது வாஸனை கெடும்) உண்டாகும் என்பது, அநுபவ ஸ்ரீமஹான்களின் வாக்காகும்.




அல்லது இரண்டாவது :— உன் ஸத்குரு அருளும்
எல்லாம் நீயே! எல்லாம் உன்றலி! எல்லாம் உனதே!
என்ற, சர்வார்ப்பணத்தை, ஓர் நாம ரூப முள்ள,
ஸ்ரீபகவானிடம், நிர் மலமாக, எந்த சந்தேக,
கலக்க பயமின்றி, விட்டுவிட்டால், அந்த
**கூடகம** நாம ரூப, ஸ்ரீபகவான், தம் மாயா
என்ற கூடசமக்கால், நாம ரூப, ஜக ஜீவ, தோற்ற
**குணகூடகமத்தை** அவசியம்
நாசம் செய்வான் என்றும், நாசம் செய்து விட்டான்
என்றும், திட உணர்வான **நம்பிக்கை**
சந்தேகமின்றி, இருக்க வேண்டும்.
உன் நம்பிக்கையே, பலமும் பலனும் ஆகும்!
இதுவே **பரமரகஸ்யம்** மார்க்கம் ஆகும்!





ஸ்ரீவஸிஷ்டர் :- மனோநாசம் :- நம் மனதின் வடிவம் எண்ணமே! இந்த எண்ணங்களின், வடிவம் நாமரூபங்களின், இருப்பும்/இயக்கமும்! இணைவதனால்! நான் & நீ! எனது & உனது! என்றன் & உன்றன்! அவன் & அவள்! அது & இது! என்ற நிலையில் விருப்பு வெறுப்பினால் தோன்றும், பேதமே! அப்பேதத்தால் உண்டாகும், குற்றம் குறை! என்ற: வேக வெறியின் மனோ எழுச்சியே, நம் மனதின் குணமாகும்! இங்கு இம் மனோநாசமானது, முன் (வாஸனாக்ஷயத்தில்) கூறிய, இரண்டு நிலைகளிலும் அவரவர் நிலைக்கு, பக்குவம் ஆகி இருக்கும் போது, ஸ்ரீஸத்குரு அருளும் எல்லாம் மண்ணே! மண்ணாகிய, பரமே! பரமாகிய நாமே! நாமே பரம்! என்ற அகண்டாகார பாவனையால் மட்டுமே, மனோநாசம் ஆக முடியும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.



அகண்டாண்ம பாவனை/ஸ்வய அனுபவம்

ஆகாமல்! வேறு எந்த சாதனையாலும்! வேறு எந்த கர்மாவினாலும்! வேறு எந்த தேவ தெய்வ உபாசனையோ! வரப் பிரசாதங்களாலோ! வேறு எந்த


சக்தி ஸித்திகளாலோ! வேறு எந்த மார்க்கங்களினாலோ! மனோநாசம்

பெறமுடியாது என்பது! ஸத்யம்! ஸத்யம்!! ஸத்யம்!

தத்துவ ஞானத்தால்தான்! மன ஒழி வாசனைகளும்!

மன ஒழி வாசனை கெட்டு, அதனால் பெறும்

அகண்டாண்ம பாவனை/அனுபவ நித்யமானதால், மனோநாசம்/என்ற, மனம் மடிந்த நிலை! பெற முடியும்! மனோநாசமான நால் பெறும், அகண்டாண்ம பாவனுபவமே, பிரவாஹயோகிய ஜீவன் முக்தியாகும் என ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.






ஸ்ரீகண்ணன்:- ஹேபாபா! உன்னுடைய "சொல்லற சும்மா சுகமாயிரு! என்ற மடலில் குறிப்பிட்ட பேச்சைக் கேளு! விட்டுக் கொடு! சகித்துக் கொள்!

# பொறுமையாயிரு!

ஆகிய இந்த நான்கும், அதிவலியுறுத்தி, சொல்லும் வாசகம் ஆகும். இதை எப்படியோ, அம்மடலில், திரும்ப திரும்ப எழுதி முடித்து விட்டாய்! இதை அறிந்த அன்பர்களும், படிக்கும் போது எல்லாம், எல்லோருக்கும் **சந்தேகம்** கலந்த ஓர் **திகைப்பு** மருட்சியின் மிரட்சி தோன்றுவதை, யாம் உணர்கிறோம். இந்த நான்கிற்கும், ஓர் **தெளிந்த** தந்தால், பரவாயில்லை யென தோணுது.






அது ஸரி, உன் அபிப்பிராயம் என்ன?

வைசிக்யம்:- உண்மைதான் கண்ணா! யாம் சொல்வதை விட, **பிரம்மஞானி** எம் **ஸ்ரீவஸிஷ்ட பிரான்** வாக்காலேயே, கேட்பதுதான் உசிதம்.

ஸ்ரீ உத்தவர்:- உண்மைதான்பா! இந்த நான்கு யுகங்களிலும், **இஸ்வரு/ஸாது** தர்மத்தோடு! துறவியானவர், இவர் ஒருவர்தான்!


ஆகவே, அவரிடம் நீ கேட்பதுதான், சாலச்சிறந்தது என, எமக்கும் தோன்றுகிறது.

ஸ்ரீ வஸிஷ்டர்:- (கண் மூடிய நிலையில்) **மோனத்தில்!** ஆழ்ந்திருந்த, எம் ஸ்ரீவஸிஷ்டர் மோனம் கலைந்து, என்ன குழந்தைகளே! திகைப்பு? கேள்வியும், தெளிவு பெற வேண்டுமோ?




வைத்தியம் :- ஆமாம் குருதேவா! ஓர் சிறிய கேள்வி ? அதாவது ஓர் மடலில் ---------

(இடைமறித்தார் ஸ்ரீ குருதேவர்) அம்மான எம் ஆத்மானந்த செல்வமே பாபா! அந்த ஒன்றின் அன்பின் குடிலில், வெளியாகும் அனைத்து மடல்களையும், **ஹிமாலய** வாசிகள் அனைவரும் தவறாமல் பார்த்து வருகின்றனர். அவைகளை, **யாமும்** கவனிக்கிறோம்! அவை அனைத்தும், அதன் **பரத்தின்** ஒலி & ஒளியாக, இருப்பதால், அவைகளை யாமும், சுவைப்போம். அதில் சமீபமாக வந்த, மடல் ஒன்றின் நாமம்! சொல் அற சும்மா சுகமாயிரு! என்பதாகும். அதன் ஒட்டு மொத்த ஒரே கருத்தாவது! பேச்சை குறை! விட்டுக் கொடு! சகித்துக் கொள்! பொறுமையாயிரு! என்ற, நான்கு மகா வாக்கியங்களாகும்.



இந்த நான்கு வாக்கியங்களையும் படித்த
சாதகியானவர்கள் அனைவரும், (இங்கும்! அங்கும்!
எங்கும்!) திகைக்கின்றனர். அதன் உண்மைப்
பொருளை உணரத் துடிக்கின்றனர் என்பதையும்
யாம் அறிவோம். ஏனெனில் அந்த நான்கிலும்
ஏன் தெளிவு கொடுக்கவில்லை.

வைத்யம்:- ஹே ஸத்குருநாதா! ஸத்குருவையா!
சாந்த சொரூபா! ஸத்திய சொரூபா! (A) ஒன்றை கொடுக்க
பக்குவம் வேண்டும்! (B) ஏக்கம் துடிப்பை
உண்டு பண்ணி, பிறகு கொடுக்க வேண்டும்! (C) அத்துடன்
அவர்கள் வினையும்! மனமும்! பரிபாகப்
பட்டு விட வேண்டும்! (D) அனைத்திலும், அதிகமான
தாங்களாஸ்தான் கொடுக்கப்
பட வேணுமென்று! அன்றே வந்த கருத்து.
அது இன்று நிறைவேறப் போகிறது.



ஸ்ரீ வஸிஷ்டர்! ஸ்ரீ உத்தவகர்! ஸ்ரீ ரிபு மஹரிஷிமார்!
ஆகிய மூவரும் இணைந்த குரலில் :- ஓ ஓ ஓ ஓ ஓ
அருமை பாபாஜீ! இதுதான் உன் திட்டமா?
**பலேஜோர்!** அருமை மிக, மிக, மிக, மிக!
**பழமையானவன்!** என்றார்கள்.
உடனே அப்பைத்தியம், அம் மூவர் திருவடிகளிலும், தண்டம்
போல் விழுந்து, நயனங்களில் அத்திருவடிகளை,
ஒற்றிக் கொண்டு, கண்ணருவி பெருக்கெடுத்து
ஓட! நாவு தழுதழுக்க! ஹே **மஹாத்மா**
**மஹாத்மாக்களே!**
திட்டம் என்றால் என்ன? அத்திட்டம் போடுவது யார்?
அத்திட்டத்தை நிறைவேற்றுவது யார்? அத்திட்டம்
யாருக்காக? இப்படி பகுப்புற்றுப் போன ஒன்று,
என்ன செய்யும்? என்ன செய்ய முடியும்? செயல்
படா **ஒன்று!** உங்கள் மூலம் செயல் படுகிறது.



உ



அன்பர்களே, வாழ்த்து அருளுங்கள், அவர்களும்

அது ஆகட்டும்! அதனால் அறியாமை

நோய் நீங்கட்டும்.

உங்கள் பணியை செய்யுங்கள்

உங்கள் திருவடிகளில் யாம் பணிகிறோம்.

அது (ஐக்கியம்) தன்னை முடித்துக்கொண்டது.

அதன் பணியை அவர்கள் செய்தார்கள்.

அவரும், தம் தம் நிலைக்கு, வந்தனர் போலும்?

எம் கண்ணனும், நால்வர் திருவடிகளையும், சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, அவரின் திருவடித் தூளியையும், தம் சிரம் மேல், தரித்துக் கொண்டு, சொன்னதாவது:-

ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம், நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம், நிர்மோஹத்வே நிஸ்சலதத்வம், நிஸ்சலதத்வே ஜீவன்முக்தி, இது இங்கு நிதர்சனமாக அமைகிறது.

என ஸ்ரீ ஆதிசங்கரர் வாக்கு.




பேச்சைக் குறை! (55)
விட்டுக் கொடு!
சகித்துக் கொள்!
பொறுமையாயிரு!
ஆகிய நான்கு வாக்கி
யங்களையும் நான்கு
மஹாவாக்கியமாக
உறுதி கொண்டார்கள் ஸ்ரீ மஹான்கள்.
ஆகவே அந்த மஹா வாக்கிய வரிகளையும் தொடரும்.

இது அதன் (பர) கருணையை (பர) ஒலி & ஒளியாக ஸ்ரீ ஸத்குரு வாக்காக நடைபெறுகிறது என்றான்! எம் கண்ணன்.

ஸ்ரீ வசிஷ்டர் :- ஓ எம் பரமாத்மானந்த குழந்தைகளே! அந்த நான்கும், மஹா வாக்கியமென உணருங்கள். இனி அதன் ஸத்திய வாக்கானது :-

## (A) பேச்சைக் குறை :-

இதன் விளக்கத்தை ஸ்வய ஞான அனுபவ நூலின், 42வது, பாடலில் காணலாம். அதன் ரஸாம்ஸத்தை, சுவைத்து அனுபவிக்கலாம். அப்பாடல், எளிய முறையிலேயே, தமிழில் அமைந்திருக்கிறது. அதன் கருத்து, முதலில் மௌனத்தையும்! பின் முடிவாக, மோனத்தையும்! சுட்டிக்காட்டுகிறது. ஓம் சிவ மஹாத்மாவே! தாங்களோ அப்பாடலையும், அதன் விளக்கத்தையும் தரவேணுமென்று, நான் பணிந்து வேண்டுகிறேன்.





ஸ்ரீவிபு மஹாத்மா :- எம் ஆனந்த குழந்தைகளே!

**42/** = அப்பாடலாவது :-

எப்போதும் இயம்பாமல் மௌனியாகி,
எவருடனும் கூடாமல் ஏகாந்தத்தில்,
கற்போல அசையாமல் இருந்து சற்றும்,
கலங்காத மனதுடனே ஒருமையாகி,
சற்போத சுககனமாம் பரம் நாம் என்றே.
சந்ததமும் பாவித்து ஸாந்தனாகி,
தற்போத சூனியனாய் விகல்பம் தீர்ந்து,
தற்பதமே தாமாகி முக்தனாவாய்.

வரிவிளக்கம்.

அதிக பேச்சு வேண்டாம். நாவு அடங்கி இரு. (சிவ காவ்யம்)
எச் ஜீவர்களிடமும் சேராமல், தனிமையில் இரு.
கல்லைப் போலும் மரம் போலும், எண்ணமற்று இரு.
இத்தனிமையின் முயற்சியால், மனம் கலங்காமல் இரு.
ஆனந்த சுகத்தை கொடுக்கக் கூடிய, பரமே நாம் என இரு.
அப்பரமே நாம்! நாமே அப்பரம்! என அனுபவம் கூட்டு.
பாடம் படிப்பதை குறை! அனுபவம் கூட்டு! கேள்வி குறைதவிர்!
அவனாகிய அதுவே நாம்! நாமே அது! அதுவே நாம்! என
ஜீவன் முக்தனாவாய்.



பாட்டின் உட்பொருள்.

முதல் இரண்டு வரிகளும், வாய் பேசா மௌனத்தை! சுட்டிக்காட்டுகிறது.

அதாவது பேச்சைக் குறை! அப் பேச்சு நிகழும் கூட்டங்களை விட்டு விலகு! தனிமையே

லௌகீக இனிமையையும்! தெய்வீக ஆனந்தத்தையும்! கர்மாவின் நீக்கத்தையும்! மன ஆனந்தத்தையும்! அவசியம் கொடுக்கும்.

இங்கு உலகம், உன்னை பயமுறுத்தும். அதாவது நான் இல்லாமல், உன்னால் வாழ முடியாது. என் தயவில்லாமல், நீ ஜீவிக்க முடியாது என, உன்னை மிரட்டும். இங்கு கலங்காதே! மயங்காதே! சோர்வுறாதே! அயர்வுறாதே! எல்லாம் நீயே! என சரணடைந்தால், அது ஸ்ரீ பகவானுக்கே பரசொருபக்கின்றே பொருந்தும். உலகம் உன்னை கை விட்டு விடும். உலகம், உன்னை கை விட்ட மறுகணம்! உன் நம்பிக்கை என்ற, அவன் கை (அபயஹஸ்தம்) கிடைக்கும். பின் உன் அனுபவம் கடைசி நான்கு வரிகளும் ஆகும். அதாவது?



தாய் கோழியின் (58)
சிறகானது நம்
சித்த உஷ்ணத்தை
கொடுத்து, வெளியில்
இருந்து வரும் குளி
தோஷ கரும் உஷ்
ணத்தை நாசம் செய்யும்
சித்த உஷ்ணம் என்பது கரும் குளிரும் இல்லா
மல் இருமையான இதமான உஷ்ணம் எனப்
பெயர் பெறும்.

இதன் உவமான கதை.

தாய் கோழியின் இறகுக்குள், குஞ்சு! எப்படி பாது காப்பாய் இருக்குமோ, அப்படி என்கிறார்.

கோழி குஞ்சு! ஆத்ம சாதகன் ஆவான்.

தாய் கோழியின் தலை! செயலுள்ள ஸ்ரீ பகவான்.

தாய் ,, சிறகு! செயலற்ற பர சொரூபம்.

(மேலே விளக்கம்)


தூவ வின்யாஸ் சூழும் சிரமங்களை தவிர்த்து பாது காக்கும்.

மனோ பார உஷ்ணத்தை, சிறகு அரவணைத்து குறைக்கும்.

முன் சொன்ன, வாய் பேசா மௌனமானது, இறை பர பாவனையால், மனம் பேசா மௌனமாக முடிவுறும்.

முந்தையது மௌனம் என்றும், பிந்தையது மோனம் என்றும், ஸ்ரீ ரமணர் சொல்வதைக் கேள்விப்படுகிறோம்.

இதுவே பேச்சைக் குறை! என்பதன் விளக்கமாகும்.



குறிப்பு :— மௌனம் என்றால், பேச்சை நிறுத்துவது
ரொம்ப, ரொம்ப, ரொம்ப, குறைவாக பேசு. அல்ல.

இறை ஒரு உணர்வோடு பேசு. எக்காரணம் கொண்டும்,

பிறரை **சொல்** வாலும்! **செயல்** ஆலும்!

**புண்** படுத்தாதே! பிறர் அவ்விதம் செய்தால்,

சாந்தி ... செய்து

**வினை** கழிகிறதென்று சமாதானம் கொள்.


**வாக்கே**
- அக்கினி ஆகும்.
- அமிர்தம் ஆகும்.
- வாழ்த்தையும் ஆகும்.
- வினையின் அழுத்தமும் ஆகும்.
- தொடர் வினையும் ஆகும்.

இப்போது நடைபெறும், தூல சிரமங்களுக்கும்!

” ” மனோ பாரங்களுக்கும்!

” ” கஷ்டம், கவலை, துக்கம், துயரம்
பழி, பாவம், ஏமாற்றம், தடுமாற்றம்,
ஆகிய **கரும்** வேதனைக்கும், சோதனைக்கும்,

முன் நிகழ்த்திய, **உன் வாக்கே** காரணம்
ஆகும் என பிரமாணமாக சொல்லி, பேச்சைக் குறை!
என்பதை நினைவு செய்கிறோம்.




# (B) விட்டுக்கொடு:— ஓஓஓ


மஹத்தான மஹாத்மாவே! யோக தியாக புருஷனே!
எம் உத்தாவ கரே! இதன் விளக்கத்தை தாங்கள்
அழகு மொழியால் நிரம்பு வீர்களாக என்றார் ஸ்ரீவஷிஷ்டர்.
ஸ்ரீ உத்தாவகர் வாக்கு:— ஸ்ரீமஹான்கள் இதை இரண்டு
நிலைகளில், விளக்குவர். ஒன்று விட்டுக்கொடுத்தால்
விக்கினங்கள் மறையும்! என்றும்.

விட்டுக்கொடுத்தால் சுதந்திரம் பெறலாம்! என்றும்
சொல்வர். விட்டுக் கொடுத்தால் விக்கினங்கள் மறையும்

(1) விக்கினங்கள் என்றால், தூவ சிரமமும்!
மனோபாரமும்! இணைந்த நிலையில், துக்கம் துயரம்!
கஷ்டநஷ்டம்! கவலை பயம்! ஏமாற்றம் தடுமாற்றம்!
பழி பாவம்! இவைகளால் வரும் **வேதனையும்!**
**சோதனையும்** ஆகும். **மறையும்**
என்றால், இவைகள் மறைந்து **அழியும்**



எனப் பொருள் அல்ல; இவைகளை, கிரமங்களாக
ஏற்கும் **மனம்** பக்குவப்பட்டு வரும்.
என பொருள் கொள்ளலாம்.
அதாவது, அப்பக்குவ ஆன்மாவின் மனம், சர்வசதா
**இறை, குரு** உணர்வோடு, எப்போதும் நீயே!
என
சரணாகதியாகவே இருப்பதால், இச்சிரமங்
களை, ஸ்ரீபகவானின் **மாயா** கவனித்துக் கொள்ளும்
என, உணர வேண்டும். மேலும் ஒருவர் சொல்லாலும்!
செயலாலும்! அறிந்தோ, அறியாமலோ! ஓர் துன்பம்
தரும் போது, இது ஸ்ரீபகவான் செயலே! என எண்ணினால்,
அவனுள்ளும்/ உன்னுள்ளும்! இருப்பவன் ஒருவனே!
அங்கு நீ விட்டுக் கொடுக்கும் போது, உனக்கு
ஆகாமிய வினை, உன்னை சாராமலும்! அவன்
ஆகாமிய வினை, உன்னைத் தாக்காமலும்! முன் சொன்ன
படி, குஞ்சை பாதுகாக்கும், தாய் கோழியைப் போல்,
அவனால் உன்னை ரட்சிக்க முடியும் என்று மகான்கள்
சொல்வர். இங்கு பொறுமையும்! நம்பிக்கையுமே உன்
கவசம் ஆகும்.




ஒருவருக்கு ஒருவர் (௧) விட்டு கொடுப்பதால் வாழ்க்கை அழகாகிறது. அந்த தன்மையால் அதை சார்ந்த செயலும் அமைதியும்! திருப்தியும்! நிறைவும்! ஆனந்தமும்! இயல்பாக உண்டாகும். இதை மிஞ்சிய சுதந்திரம் எங்கும் இல்லை.

(௨) விட்டுக் கொடுத்தால், சுதந்திரம் பெறலாம்!

சொல்லாலும்! செயலாலும்! ஒருவருக்கொருவர், **அடங்குதலே** சுதந்திரம் பெறும் நிலையாகும்.

மன்னிப்பு கேட்பவன் தான் **மனிதன்** என்றும், மன்னிப்பு கொடுப்பவன் தான் **இறைவன்** என்றும், ஸ்ரீமஹான்கள் சொல்வர். ஆனால் இவ்வாசகம், **கலிதோஷ குண** மக்களுக்கு பொருந்தாது. **சாதனை** செய்யும், பக்குவ ஆன்மாக்களுக்கே பொருந்தும். உலகியல் மக்களுக்கு, கொடுக்கும் மன்னிப்பானது, பழிபாவம்! தப்பு தவறு! குற்றம்! கொலை! களவு! செய்பவர்களுக்கு, அதை திரும்ப திரும்ப, செய்யத்தூண்டும் ஓர் **ஆயுதம்**! ஆகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.


சாதனையாளன் வருந்துவான்! திருந்துவான்!
கலிதோஷியானவன் மேலே சொன்ன குணதோஷங்களை மேலும் மேலும், சுவைப்பான்! அதை மறவான்!






கணவரோ? மனைவியோ? அப்பாவோ? அம்மாவோ?
உறவோ? நட்போ? குழந்தைகளோ? பேரன்
பேத்திகளோ? ஒருவருக்கொருவர் **சொல்**
லிலும்! **செயல்**களிலும்! **தாழ்ந்து**
போய், விட்டுக்கொடுத்தால்? தாழ்ந்து நின்றால்,
வாழ்ந்து நிற்பாய்! என்ற பழமொழிப்படி,
வினையின் கடினம், இல்லாமல் ஆனந்தம் அடையலாம்.

ஒருவருக்கு ஒருவர், சொல்லிலும்! செயலிலும்!
தாழ்ந்து, விட்டுக் கொடுக்கும் போதுதான்,
**வினையின்** முடிச்சு தளர்கிறது!
" " சிக்கல் எடுபடுகிறது!
" " எரிந்த சாம்பல் கயிறாகிறது!
" " பழவினை நாசமாகிறது!
" " புதியவினை தொடர்வதில்லை.
" முக்காலமும், மாறி அழிந்து, நாசமாகிறது.



ஒருவருக்கொருவர், தாழ்ந்து விட்டுக்
விட்டுக் கொடுக்கும் போது, **மன** முடிச்சோ?
**வினை** முடிச்சோ? பயனற்று போனதன்மையால்
**விதியும்** அனுகூலமாகும்! பிரதிகூலமாகாது
நலம் கொடுக்கும்! தீமையை கொடுக்காது
ஆகவே இந்நிலையில் பந்த ஜீவன்/ பந்த நிவர்த்தி
ஆகி **சுதந்திரம்** அடைகிறான். என்பது
ஸத்தியம் என, ஸ்ரீமஹான்கள் சொல்லக்கேள்வி!

விட்டுக் கொடு என்பதுடன், ஓர் சிறிய விளக்கம் தந்து,
இதை நிறைவு செய்கிறோம்.
ஆணுக்கு பெண்ணும்! பெண்ணுக்கு ஆணும்! எந்நிலையிலும்
சொல்லிலும்! செயலிலும்! சற்று தாழ்ந்து
விட்டுக் கொடுக்கலாம். பொருள் கொடுக்கல், வாங்கலிலும்
விட்டுக் கொடுக்கலாம். **சேவை** செய்வதிலும்!
ஒருவருக்கொருவர், விட்டுக்கொடுக்கலாம்.



சேவையையும்! சேவையின் கால அளவையும்!

ஸ்தானம் பொறுப்பையும் யாம்

முந்தியவன் & முந்தியவர்! பிந்தியவன் & பிந்தியவர்!

என்றே ஜீவ நதியில் கணக்கு!

பார்த்தால், உங்கள் கணக்கை (விண்மணம்)

அவன் பார்த்து விடுவான். ஓர் உண்மையை,

உணரவும் :- சேவை விட்டுப் போகிறது என்றால்?

நம் சேவையின் காலம் முடிந்து விட்டது

என்றும்; ஜீவ & பர / ஐக்கியம்

நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றும், தெளிவு


பெற வேண்டும். உங்கள் தெளிவே, உங்கள் அனுபவம்

ஆகும். அங்கு தெளிவு பெறுமல், சந்தேக கலக்க

பயம் கொண்டால்; அங்கு உங்கள் மனம் எப்படி,

தெளிவை விரிக்கிறதோ, அப்பயமே பாரமாகும்

இது சத்தியம்! இது சத்தியம்!! இது சத்தியம்!!!



ஆகவே எந்த ஜீவர்களையும், ஒதுக்கி கணக்கு பாராமல், அனைவரையும் **நம்மவர்களே** என, ஐக்கியப் படுத்தி பழகுங்கள்.

இந்த பேதமற்ற ஐக்கியமே! இந்த விருப்பு வெறுப்பற்ற ஐக்கியமே! குற்றம் குறையற்ற ஐக்கியமே!

ஒருவருக்கு ஒருவர், விட்டுக் கொடுக்கும் நிலையாலும்,
இப்படி விட்டுக் கொடுப்பதால், விக்கினம் மறைந்து அமையும்
,, ,, ,, சுதந்திரமும் பெறுவாம்!

அதனால் ஜீவன் முக்தியும், பெறுவாம் என்று நிறைவு செய்கிறேன்.

## ஓ சகித்துக் கொள்:—

பிரம்ம ரிஷி ஸ்ரீ வசிஷ்டர் பிரான் எழுந்தார். விட்டுக் கொடு என்று, அழகு பிரவாகம், அனைவரின் அன்பான இதயங்களை எல்லாம், நிரப்பி விட்டது. இனி சகித்துக் கொள் என்று, அழகு பிரவாகத்தை, எம் ஸ்ரீ ரிபு மஹரிஷிமா கடல்மடையை திறந்துவிட்டதும் என மொழிந்து விட்டு, அமர்ந்து விட்டார்.



சகித்துக் கொள். (67)

என்ற வாசகம் எதையும் நலமே என, ஏற்றுக் கொள்வதாகும். அது எப்படி நலமே என ஏற்றுக் கொள்ள முடியும் எனக் கேட்கலாம். அப்படி ஏற்காமல் நலமே என

**வேறு என்ன**

செய்ய முடியும்??????


தொடரும்.

ஸ்ரீ ரிஷி மஹாத்மா :— சகித்துக் கொள் என்றுவே, எதையும் நலம் என, ஏற்றுக் கொள் என்றும், பொறுமையே/ கவசமாக இருக்க வேண்டும் என்றும், எல்லாம் **அவன்** செயல் என்றும், ,, **அவன்** பொருள் என்றும், **எல்லாம் நீயே!** என்பதும், அமைந்த மஹாமந்திரம் ஒன்றாலேயே, சகித்துக் கொள்ள முடியும். வேறு எந்த வழிமுறைகளும், இதற்கு பொருந்தாது என்பதே, ஸத்தியமான வாக்கு என, ஸ்ரீமஹாத்மா சொல்வார்.

இதை கவனிக்கவும்?

**ஜீவமுயற்சி** எதுவும் இல்லையென்பதே ஸத்தியம்.

ஜீவமுயற்சி இல்லை என்றால், **கர்மா** எவருடையது என்ற கேள்வி வரும்? கர்மா ஜீவனுடையது. அக்கர்மாவை, அஹங்கார மமகாரத்தால் இச்ஜீவன், வலிய ஏற்பதனாலேதான், கர்மா தொடர்கிறது என உணர வேண்டும்.



(68)

வேறு அகந்தை
மாறாக, பேசினாலோ?
வாக்கால் துன்பம்!
தேகம் செய்தாலோ?
செயலால் துன்பம்!
வெந்த புண்ணில், வேல்
பாய்ச்சுவது போல், எல்லாம்

ஞானமாய் முடியும்! நலமாய் முடியாது.
தொடரும்.

அஹங்கார, மமகாரம்! நீங்காமல் இச்ஜீவன், சர்வார்பணமாக, கர்மா செய்யாததால், எக் கர்மாவும், இச் ஜீவனை சாராது. இதை ஸ்ரீமஹான்கள் எப்படி சொல்கிறார்கள் என்றால்?

சர்வார்ப்பணம் ஒன்றே! ஜீவ (மன) முயற்சி ஆகும்.

சர்வார்ப்பணம் ஒன்றே! கர்மா நிவர்த்தியுமாகும்.


இப்படி சர்வார்ப்பணமாக, கர்மா செய்யாமல், உடைமை உரிமை முயற்சியோடு, அஹங்கார, அதிகார, ஆதிக்க, அபிமான முயற்சியால், கர்மா செய்யும் போது, கர்மா பிரவர்த்தி! தான் உண்டாகுமே தவிர, கர்மா நிவர்த்தி! இல்லவே இல்லை.

இதனால் வரும் கர்மா பாரத்தையும்! மனோபிரமத்தையும்!

இச் ஜீவனே ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

எனக்கு, என்னுடையது


என, கர்மா செய்வதால், அம்மனதால் சகிக்க முடியாதபடி, துன்பத்தை அனுபவிக்கிறான், இன்றைய ஜீவன்.




தீராத விளக்கு (69)

தெய்வமே அன்னை
என்பது போல், ஸ்ரீ பக
வன் நாம ஸ்மரணை
யுடன், நாம் கொடுக்கும் எதையும்
தை வாங்கிக் கொள்ளும் நாம் ஊன்றி
நாம் விதைக்கின்ற
ப்ரேம் என்றும் மனதை ஸாந்தி, சமாதானம்,
செய்தால், நாமும் நலம் பெறுவோம்.
எஜமானியும் நலம் பெறுவாள். முடிந்தது.

இந்த சகிப்புத்தன்மை என்ற, சக்தியைக் கொண்டதை,
ஓர் **பக்தர்** எப்படி ஏற்றுக் கொள்கிறார் என்றால்?
அப்பக்தருக்கு, தண்டனையாக, அரைப்படி அரிசியும்!
அரைப்படி உப்பும்! கலந்து சமைத்து கஞ்சியாக,
கொடுக்கிறார்கள். அந்த பக்தர், அதை உண்ணும் போது,
எப்படி ஏற்கிறார் என்றால்:- ஸ்ரீ ராமப் பிரபோ! அன்று
நீ கானகத்தில், அலையும் போது, இந்த அரிசி சாப்பாடும்,
உனக்கு கிடைக்கவில்லையே! அதற்கு மாறாக, உனக்கு
இலை! தழை! காய்! கனி! கிழங்கு! இவைகளை, வேக
வைக்காமல், பச்சையாய் உண்டாயே? எனக்கு
வேக வைத்த, அரிசி உணவு, கொடுக்கிறாயே?
அவர் அடைபட்டிருந்த, ஜெயிலை (காராக்கிருஹம்)
சுட்டிக்காட்டி, ஸ்ரீ ராமச்சந்திரா! அன்று கானகத்தில்
மழை, காற்று, பனி, வெயில் என்று பாராமல் மர நிழலில் தங்கி
எத்தனை அவஸ்தைப்பட்டாய்? எனக்கோ மேலே, கூரை
நாலும் தாக்காமல், அரண்மனை வாழ்வு கொடுத்திருக்கிறாயே?
என்னே உன் கருணை யென்று, அதாவது?



மேலே கம்பீரமான கூரை! பெரிய பெரிய இரும்பு
கதவுகள்! எம்மை பாதுகாக்க, நூற்றுக்கணக்கான,
வேலையாட்கள்! இப்படி பலநிலைகளை, சமைத்துக்கொட்டி,
அமைத்து **கட்டடங்களையும்**! நீ அனுபவித்து
கொண்டு! எமக்கு, அரண்மனை **வாழ்வும்**!
எம்மை அனாதையாக விடாமல் **ஆதரவா
ளர்களையும்**! நிறைய கொடுத்திருக்கிறாயே
பெருமானே! உன் அளவற்ற, கருணைக்கு ஓர், எல்லையே
இல்லையென, ஸ்ரீபகவானை! புகழ்ந்து! புகழ்ந்து! **தம்
சிரமங்களை**, இல்லாமல் செய்து விட்டார்!
இதிலிருந்து, ஓர் உண்மையை, நாம் உணர வேண்டும்.
ஸ்ரீபகவான்! நாம் வாழ்நாள் பூராவும், அளவற்ற
**வசதிகளை** அள்ளி! அள்ளி! தருகிறான்.
தந்து கொண்டே இருக்கிறான் நம் விதியின்படி,
இவை சில, கஷ்ட நஷ்டம்! வருத்தம் செய்யும்.
அந்த அளவற்ற, இன்பங்களை, எண்ணி எண்ணி!




அவனைப் போற்றுகிறோமா? எனப் பார்த்தால், இல்லவே இல்லை! சிவ சிவ! சிறு சிறு! குறை பாடுகளை மட்டுமே வெளிது படுத்தி எண்ணி எண்ணி, துக்கிக்கிறோம். ஸ்ரீபகவானை! கருணையே இல்லாதவன், என தூற்றுகிறோம். இது நம், அறியாமையே சுட்டிக்காட்டுகிறது! ஆகவே சகிப்புத் தன்மை மிக மிக, முக்கியமாகும்.

சகிக்க முடியாமல் போவதற்கு! அதாவது சகிக்க இயலாமல் போவதற்கு! அதாவது எதையும் நலமே என, ஏற்றுக் கொள்ளாமல் போவதற்கு! அதாவது பொறுமையே! இல்லாமல் போவதற்கு நமக்கு இறை நம்பிக்கை இல்லாததே காரணம். இறைநம்பிக்கையே காரணமாகும்.

பசி, பசி! சாப்பாடு, சாப்பாடு! என கூப்பாடு போடுகிறோயே! சமைத்தவன் வந்தால் தானே! சாப்பாடு போட முடியும்? சாப்பாடு உன்னை தேடி வருமா? கொஞ்சம், பொறுத்திருந்து தான் பாரேன்? உன் சிரமத்திற்கு, நீதான் (உன் மனம் தான்) காரணம், என்று உணர முடியும்.

பாபா.




Abode of Love

You Are Everything!